சுருக்கம்

பணியமைப்பு - நீர்வளத்துறை - தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி - திரு. க.ஹேமநாத், த/பெ. காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு. G.கருணாகரன் - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது

---

நீர்வள(பி1)த் துறை

அரசாணை (3ப) எண்.55

நாள் : 30.11.2023
சோபகிருது, கார்த்திகை – 14,
திருவள்ளுவர் ஆண்டு, 2054

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.
2. முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.எஸ்.3(2)/37140/2022, நாள்:25.07.2022.
3. அரசாணை (நிலை) எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, நாள் 08.03.2023.
4. தலைமைப் பொறியாளர், நீர்வளத் துறை, வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சென்னை கடித எண்.பிஇ3/ 3975/ 2023, நாள் 01.11.2023.

-------

ஆணை:-

மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், நீர்வளத் துறையில் ஆரணியாறு வடிநில கோட்டம், சென்னை அலுவலகத்தில் ஓட்டுநராகப் பணிபுரிந்து வந்த திரு. G.கருணாகரன், 20.10.2021 அன்று காலமானதை அடுத்து, அவரது மகனான திரு. க.ஹேமநாத் என்பவருக்கு கருணை அடிப்படையில் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் நீர்வளத் துறை, செயற் பொறியாளர், வடிவமைப்புக் கோட்டம், சென்னை அலுவலகத்தில் 01.08.2022 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்று தெரிவித்து, தனியரின் பணியினை அவர் பணியேற்ற நாளான 01.08.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்கிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. தலைமைப் பொறியாளர், நீர்வளத் துறை, வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சென்னை அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், மேலே ஒன்று மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும், திரு. க.ஹேமநாத் பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், நீர்வளத் துறையில் கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்ட நாளான 01.08.2022 முற்பகல் முதல் அப்பதவியில் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு பணி வரன்முறை செய்வதால் தனியர் ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தீப் சக்சேனா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்</u>:-

தலைமைப் பொறியாளர், நீர்வளத் துறை, வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சென்னை - 5.
திரு. க.ஹேமநாத், இளநிலை உதவியாளர், நீர்வளத் துறை, (தலைமைப் பொறியாளர், நீர்வளத் துறை, வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சென்னை – 5 வழியாக)

<u>நகல்</u>:
முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத் துறை, சென்னை – 5.
மாநில கணக்காயர், சென்னை -18.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

1/12/23
பிரிவு அலுவலர்
1/12/23